IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.V

(Chapter XXIII Code of Criminal Procedure)

TIRUNELVELI.

| | | |
|---|---|---|
| Case Number | : | CC 2631/2022 |
| Deposition Of Witness for | : | PW 3 |
| Name | : | மாரியப்பன் |
| Father's/Husband's Name | : | முருகேசன் |
| Village | : | நாஞ்சான்குளம் |
| Calling | : | ஓட்டுநர் |
| Age | : | 43 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, this **09.06.2026**

**(எதிரி ஆஜர். எதிரி வழக்கறிஞர் ஆஜர்)**

**முதல் விசாரணை**

நான் நாஞ்சான்குளத்தில் குடியிருந்து ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். 16.06.2022 ம் தேதி பகல் 12.30 – 01.00 மணிக்கு நாஞ்சான்குளத்திலுள்ள காணியாளான் கோவில் அருகே மானூர் போலிசார் விசாரித்து நானும், செல்வமும் கோவிலில் நின்று கொண்டிருந்தபோது, எங்கள் முன்னிலையில் வரைபடம் வரைந்தார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2 வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். அதிலுள்ள விபரம் எனக்கு தெரியும். (**அந்த பார்வை மகசரானது அசாஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). போலிசார் என்னை விசாரித்தார்கள்.

RANI K

Digitally signed by RANI K
Date: 2026.06.09 15:50:58 +0530

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் ஓட்டுநராக பணிக்கு எத்தனை மணிக்கு சென்று எத்தனை மணிக்கு செல்வேன் என்றால் நான் பள்ளி வாகனம் ஓட்டுவதால் காலை 07.00 மணிக்கு சென்றுவிட்டு, 09.30க்கு வீட்டிற்கு வந்துவிடுவேன். பார்வை மகசரை எந்த அதிகாரி வரைந்தார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் உதவி ஆய்வாளர் வரைந்தார். பார்வை மகசரிலுள்ள விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் சம்பவ இடத்திற்கு அருகிலுள்ளவைகள் குறித்து எழுதியுள்ளார்கள். நான் போலிசார் கேட்டுகொண்டதற்கிணங்க எழுதாத பேப்பரில் கையொப்பம் போட்டுக்கொடுத்தேன் என்றால் இல்லை. எதிரிக்கும், எங்களுக்கும் கோவில் சம்மந்தமாக பகை உள்ளது என்றால் பகை உள்ளதால் போலிஸ் கேட்டுகொண்டதற்கிணங்க நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றாலும், போலிஸ் கேட்டுகொண்டதற்கிணங்க நான் கையொப்பம் போட்டுக் கொடுத்தேன் என்றாலும் சரியல்ல.

RANI K

Digitally signed by RANI K
Date: 2026.06.09 15:51:02 +0530